
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 2 | ஏப்ரல் 1989 | இதழ் 4

பரிசுத்த



வேதாகமம்

வெளியிடுவோர் :

**ஈரோடு கிறிஸ்துவின் சபையார்,**

2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

(28-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நித்திய ஆக்கினையின் நரக அனற் பிழப்பிலிருந்து நம்மை இரட்சிப்பதற்கே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வந்தார். ...கர்த்தர்... ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்'' (II பேதுரு 3:9). ''தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்'' (யோவான் 3:16).

நரகத்தைப் போன்ற ஒரு பொருளில் அச்சமும் நடுக்கமும் இல்லாமல் நம்மால் ஆழ்ந்து சிந்தனைச் செய்ய முடியாது. இதைக் குறித்து எழுதுவதிலும் எவ்வித மகிழ்ச்சியும் இல்லை. ஆனால் கிறிஸ்துவின் அன்பு, இந்தப் பொருளைப் பற்றி வேத வாக்கியங்கள் என்ன போதிக்கின்றன என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரச்செய்யும்படி எங்களை நெருக்கி ஏவுகிறது. யாருக்காக நரகம் வைக்கப்பட்டு இருக்கிறது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்: ''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிஷேத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு ... அவர் வரும் போது அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்'' (II தெச. 1:7, 9, 10). ஒருவன் சுவிஷேத்திற்குக் கீழ்ப்படிந்திருந்தால் நரகத்தைக் குறித்த கேள்வி, சுய அனுபவம் என்கிற வகையில் எழுதுவதே இல்லை. நரகத்தைப் பற்றிய ஆய்வுக் கட்டுரை நமக்கு மகிழ்ச்சி உண்டாக்கக் கூடியதாக இல்லாமலிருக்கையில் சுவிசேஷத்திற்கு உங்களுடைய கீழ்ப்படிதல் எங்களுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கும்! ஏன் என்றால், அது, இன்னொரு ஆத்துமா நரகத்திலிருந்து மீட்கப்பட்டது என்பதை அறிவிப்பதாகும். —தேர்ந்தெடுக்கப்பட்டது

## இதழின் உள்ளே ...


| | | |
|---|---|---|
| 1. | சபை கூட்டங்களுக்கு ஒழுங்காக வருகை தருவது ஒருவனுடைய விசுவாசத்திற்கு அளவுகோலா? | 1 |
| 2. | யார் தான் பரலோகம் செல்வார்? | 5 |
| 3. | ஆவியினால் பிறப்பது என்றால் எப்படி? | 10 |
| 4. | புறஜாதி அப்போஸ்தலன். | 14 |
| 5. | கலப்பட கிறிஸ்தவம். | 18 |
| 6. | பிரிவுகள் தோன்றுமுன் சபையின் நிலை என்ன? | 20 |
| 7. | பரிசுத்த வேதாகமம். | 23 |
| 8. | நரகத்தின் உண்மை இயல்பு. | 26 |

# THIRUMARAI AASAAN

Editor: E. Z. SELVANAYAGAM | Honorary Editor J. C. CHOATE

**Published by Church of Christ**

**2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu India**

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol 2. April 1989 Issue 4

**ஆசிரியவுரை**

## சபை கூட்டங்களுக்கு ஒழுங்காக வருகை தருவது ஒருவனுடைய விசுவாசத்திற்கு அளவுகோலா?

பேச்சைக் காட்டிலும், செய்கையே அதிக ஓசையுள்ளது. என்ற பழமொழி ஓர் ஞானமுள்ள வாக்கு. இந்த போதிலும் இந்தப் பழமொழி தோன்றுவதற்கு வெகு காலத்துக்கு முன்னரே நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்தக் கருத்தைப் பின்வரும் வார்த்தைகளால் சொல்லி விட்டார். அவர்களுடைய கனிகளினாலே அறிவீர்கள்; முட்செடிகளில் திராட்சைப் பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும், பறிக்கிறார்களா? அப்படியே நல்ல மரங்களெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும் ஆதலால் அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள். (மத். 7:16-20) பலர் வாயளவில் உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொள்ளலாம். ஆனால் செயல்படுத்திக் காட்டுபவர்கள் சிலரே. சபைக் கூட்டங்களுக்கு தவறாமல் வருவதினாலேயே ஒருவர் உண்மைக் கிறிஸ்தவர் என்று உறுதியளிக்க முடியாவிட்டாலும் ஓர் உண்மைக் கிறிஸ்தவன் சபை கூட்டங்களைத் தவற விட மாட்டான் என்பது என் சொந்த அநுபவத்தில் கண்ட உண்மை.

சபைக்கு ஒழுங்காக வருவது ஒருவன் தேவன் பேரிலும் அவருடைய கற்பனைகளின் பேரிலும் உள்ள பற்றுதலை வெளிப்படுத்துகிறது. கர்த்தரை நேசிக்கிற பிள்ளைகள் அவருடைய சித்தத்தைச் செய்ய முற்படுகிறார்கள். நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்

கொள்வதே அவரிடத்தில் அன்பு கூறுவதாம் (1 யோவான் 5:3) ''நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக் கொள்வீர்கள் (யோவான் 14:15) என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான். என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான். நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன். (யோவான் 14:21) என்கிற வசனங்கள்மேற்கூறிய கருத்தை வலியுறுத்துகிறது.

கர்த்தருடைய பிள்ளைகள் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொள்ள வேண்டும் என்று கட்டளையிடப்பட்டு எச்சரிக்கப்படுகிறார்கள் (எபி 3:13)'' அன்புக்கும் நற்கிரியைகளுக்கும், நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து, சபைகூடி வருதலை சிலர் விட்டு விடுவது போல நாமும் விட்டு விடாமல் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம்...'' (எபி 10:24-25) இவ்விதமான பக்தி விருத்திற்கேதுவான காரியங்கள், நாம் சபையாகக் கூடி ஆராதிக்கும் போதும், பாடல்களைப் பாடும் போதும், ஜெபம் செய்யும் போதும், வேத ஆய்வு செய்யும் போதும், ஐக்கியமாக இருக்கும் போதும் நிறைவேறுகிறது. (எபே 5:19 கொலோ 3:16) மேற்கூறிய கட்டளைகளின் வெளிச்சத்தில் பார்க்கும் போது ஒருவன் தன்னுடைய ஒழுங்கு தவறாத வருகையின் மூலம், 'கர்த்தாவே பேசும்; அடியேன் கேட்கிறேன், கட்டளையிடும்; அடியேன் கீழ்ப்படிவேன்' என்று கூறாமல் கூறுகிறான்.

சபைக்கு ஒழுங்காக வருவது, சபையின் பரிசுத்தத்தை ஒருவன் ஆமோதித்து கனப்படுத்துகிறான் என்று பறைசாற்றுகிறது. சபை கூடிவருதலை அசட்டை செய்கிறவன் மனப்பூர்வமாய் பாவம் செய்கிறவன் என்று வேதம் குற்றம் சாட்டுகிறது. (எபி 10:26) கர்த்தருடைய கட்டளையை அற்பமாய் எண்ணி, தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து தன்னைப் பரிசுத்தம் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தம் என்று எண்ணிக் கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் என்று சாடுகிறார். எபிரேய நிருப ஆசிரியர் (எபி 10:28, 29) ஆகையால் கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுவது போல (எபே 5:29) ஒவ்வொரு மெய்க்கிறிஸ்தவனும், தான் அங்கம் வகிக்கிற சரீரமாகிய சபையின் எலும்பும் சதையுமாக இருக்கிற படியால் அதை எல்லாக் கனத்துக்கும் உரியதாகப் பாவித்து மதித்து நடக்கக் கடமைப் பட்டிருக்கிறான்.

சபைக்கு ஒழுங்காக வருகை தருவது ஒருவன் தேவனுடைய அதிகாரங்களுக்கு கீழ்ப்படிந்து நடக்கும் பண்புள்ளவன் என்று காட்டுகிறது. ''உங்களை நடத்துகிறவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களான படியால் அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும் படி அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள் என்கிறார். எபிரேய

நிருப ஆசிரியர் (எபி 13:19) எரேமியாதீர்க்கன் இதைப் பற்றிக் கூறும் போது 'வழிகளிலே நின்று பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள் அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என்று கர்த்தர் சொல்லுகிறார்.' என்றும் அவர்களோ நாங்கள் அதில் நடக்க மாட்டோம் என்கிறார்கள் என்றும் மக்களின் அசட்டைத் தனத்தைக் குறித்து வேதனைப்படுகிறார் (எரே 6:16) சபையின் காரியஸ்தர்கள் கூடி சபையின் பக்தி விருத்திக்காக ஆராதனைக் கூட்டங்கள் வேத ஆய்வு வகுப்புகள் ஆராதனை, பெண்கள் ஐக்கிய சங்கக் கூட்டங்கள் போன்ற ஒவ்வொரு கூட்டத்துக்கும் தவறாமல் வருவது கிறிஸ்துவின் சாயலில் வளரவேண்டும் என்ற விருப்பம் உள்ள உண்மைக் கிறிஸ்தவனுடைய கிறிஸ்தவர்களுடைய கடமை. அவர்கள் இஷ்டத்துக்கு ஏதாவது கூட்டங்களை ஒழுங்கு செய்வார்கள். எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு செயல்படுவதற்கு நாம் ஒன்றும் அவர்களுடைய ஆள்காரர் இல்லை என்பது போன்ற போக்கு கிறிஸ்தவ ஒழுங்குக்கு எதிரான போக்கு. சகோதரர்களே, சகோதரிகளே! இரண்டகம் பண்ணுதல் பில்லி சூனிய பாவத்துக்கும், முரட்டாட்டம் பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரக ஆராதனைக்கும் சரியாய் இருக்கிறது என்று சாமுவேல் தீர்க்கதரிசி கூறுகிறார் (1 சாமு 15:23.)

சபைக் கூட்டங்களுக்கு ஒழுங்காக வருவது ஒருவருக்கு சபை ஐக்கியத்தில் உள்ள ஆர்வத்தைக் காட்டுகிறது. கிறிஸ்துவுக்குள் இருக்கிற சகோதர சகோதரிகள் ஒருவரில் ஒருவர் அன்பு கூர்ந்து மகிழ்ச்சியுடன் "கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்ன போது மகிழ்ச்சியாயிருந்தேன்" என்று தாவீது கூறியதைப் போல் கூறவேண்டும் (சங் 122:1; ரோமர் 12:10.) அப்போஸ்தலனாகிய பவுல் சகோதர ஐக்கியத்தை எவ்வளவு அதிகமாய் வாஞ்சிக்கிறார் என்பதைப் பின்வரும் வசனங்களின் மூலம் நாம் அறியலாம். "சகோதரரே நாங்கள், இருதயத்தின்படி உங்களோடிருந்து, சரீரத்தின்படி கொஞ்ச காலம் உங்களை விட்டுப் பிரிந்தபடியினாலே. உங்கள்முகத்தைப் பார்க்க வேண்டுமென்று மிகுந்த ஆசையோடே அதிகமாய்ப் பிரயத்தனம் பண்ணினோம்" 1 தெச 2:17; உங்கள் முகத்தைக் கண்டு, உங்கள் விசுவாசத்தின் குறைகளை நிறைவாக்கும் பொருட்டு இரவும், பகலும் மிகவும் வேண்டிக் கொள்ளுகிறோம் 1 தெச 3:10. கர்த்தருடைய பிள்ளைகள் ஐக்கியப்படுவதற்குத் தங்களுக்குக் கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் ஆவலோடு எதிர்பார்த்துப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்பதை வேதாகமத்தின் பல்வேறு இடங்களில் காணமுடியும்.

சபைக் கூட்டங்களை அசட்டை செய்பவர்கள் குறைந்த பட்சம் மூன்று விதத்தில் நஷ்டமடைகிறவர்களாகவும், நஷ்டப்படுத்துகிறவர் களாகவும் இருக்கிறார்கள்.

1) தன் சொந்த ஆத்தும இரட்சிப்பை இழந்து போகும் அபாயம்.
2) தான் சேர்ந்துள்ள சபையை பலவீனப்படுத்தும் நாசவேலை.
3) உலகத்தின் கண்களுக்கு முன்பாக இயேசுவுக்கும் அவர் இரத்தத்துக்கும் அவமரியாதை.

**சபைக் கூட்டத்தை அசட்டை செய்வதற்கான சில காரணங்கள்:**

1. ஆதாயத்தையும், சொகுசு வாழ்க்கையையும் எதிர்பார்த்து கிறிஸ்தவத்தைத் தழுவுதல். (மத் 13:20-21.)
2. கெட்ட தோழமை. 1 கொரி 15:33.
3. திருமணத்தில் அந்நிய நுக இணைப்பு. 1 ராஜா 11:1-4; 2 கொரி 6:14.
4. கர்த்தருடைய பிள்ளைகளின் ஐக்கியத்தை அசட்டை செய்தல். எபி 3:13; 10;24, 25; பிர 4:9-12.
5. ஆவிக்குரிய சிறிய தலைமையின்மை. யாத் 32-1; நியாயாதி 21:25.
6. உலக ஆசை. 2 தீமோ4:10! I தீமோ 6:10.
7. சோதனைகளுக்கு தேவனைக் குற்றம் சாட்டுதல். யாக் 1:13-16.
8. சொந்த ஞானம், திறமையில் நம்பிக்கை, சுயசார்பு. உப 8:10-20; எரே 49:4.
9. ஆவிக்குரிய உயர்வு குறித்த மனமேட்டிமை. நீதி 16:18; 1கொரி 10:12.
10. கிருபையிலல்லாது கிரியையில் சார்பு. கலா 3;3-6; 5:4-7.
11. கள்ள உபதேசங்கள். கலா 1:6-9; 1 தீமோ 4:1; 2 பேது 3:15-17.
12. நல் மனச்சாட்சியைக் காத்துக் கொள்ள முயலாமை. 1 தீமோ 1:19; அப் 24:16.
13. ஆண்டவரைப் பார்ப்பதை விட்டு விட்டு பிரச்சனையைப் பார்ப்பது. மத் 14:28-30; எபி 12:2.
14. தேவ வாக்குத் தத்தங்கள் நிறைவேறக் காத்திருக்கப் பொறுமையின்மை. ஆதி 16:2; எபி 10:35-39.
15. விழித்திருந்து ஜெபிக்கத் தவறுதல். மத் 26:40, 41.

என் அன்பு நண்பனே, சகோதரியே! மேற்கூறிய காரணங்களில் ஏதோ ஒன்றோ, சிலதோ நாம் ஆண்டவருடைய காரியங்களை அசட்டை செய்வதற்குரிய காரணங்களாக இருக்கலாம். நம் உள்ளங்களை ஆய்ந்து நம்மை தமது விலைமதியாத இரத்தத்தைக் கல்வாரியில் சிந்தி மீட்டுக் கொண்ட ஆண்டவருக்கு நம்முடைய எஞ்சிய வாழ்க்கையை அர்ப்பணிப்போமாக.

E. Z. செல்வநாயகம்

# யார் தான் பரலோகம் செல்வார்?

பெரும் பாலான மக்கள் பரலோகம் என்று ஒன்று இருப்பதை நம்புகின்றனர்; அதைப் பற்றிப் பேசுகின்றனர். ஏறக்குறைய எல்லா மதங்களும் மறுமையில் நம்பிக்கை வைத்திருப்பதாகத் தோன்றுகிறது. செய்தித் தாள்களைப் புரட்டினால், பல்வேறு மதத்தைச் சார்ந்தவர்களும் மரித்துப் போகிற தங்கள் உறவினர்கள் நண்பர்கள் யாவரும் நித்திய வீடாகிய பரலோகத்தை அடைந்து விட்டனர் என்று விளம்பரப்படுத்தி சுயதிருப்திப் பட்டுக் கொள்கின்றனர்.

பரிசுத்த வேதாகமம் கூட பரலோகத்தைப் பற்றிப் பல சந்தர்ப்பங்களில் பேசுகிறது. உலகத் தோற்றத்துக்கு முன்பே தேவனும், கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும், தேவதூதர்களும் பரலோகத்தில் வாசம் செய்து கொண்டிருப்பதாகக் குறிப்பிடுகிறது. அங்கிருந்து தான் தேவன், மனுக்குலத்தின் பாவத்தைப் போக்கி இரட்சித்து அவர்களுக்கும் நித்திய வாழ்வைப் பற்றிய நம்பிக்கை ஏற்படுத்த கிறிஸ்துவை பூலோகத்துக்கு அனுப்பினார். அதன்படியே கர்த்தரும் இவ்வுலகத்துக்கு வந்து பாடுகள் பல பட்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றும் நாள் உயிர்த்தெழுந்து பரலோகத்துக்குச் திரும்பிச் சென்று இன்று வரை அங்கே பிதாவோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவர் முன்னுரைத்தபடியே, தன்னுடைய மணவாட்டியாகிய சபையை எடுத்துக் கொள்ளவும், உலகத்தை நியாயம் தீர்க்கவும், ஒரு குறிப்பிட்ட நாளில் மீண்டும் வருவார். வந்து, துன்மார்க்கர்களுக்கு நித்திய ஆக்கினை கொடுத்து, நீதிமான்களைத் தன்னோடு சதாகாலமும் வாழ்வதற்குப் பரலோகத்துக்கு அழைத்துச் செல்வார்.

இதைக் குறித்து இயேசு உலகத்தில் இருந்த நாட்களில் தமது 'சீஷரிடம்,' உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்; என்னிடத்திலும், விசுவாசமாயிருங்கள்.

என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன்.

நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்தில் நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்வேன்" என்று சொன்னார். (யோவான் 14:1-3)

வேதாகம உபதேசப்படி, யார் பரலோகத்துக்குச் செல்ல முடியும் என்று பார்க்கும் போது நீதிமான்களும், கர்த்தருக்குள் உண்மையுள்ள தேவப் பிள்ளைகளும், கிறிஸ்துவுக்கும், அவருடைய

சரீரமாகிய சபைக்கும் உண்மையுள்ளவர்களுமே செல்ல முடியும். அவிசுவாசிகளும், துன்மார்க்கரும், தேவ பயமற்றவரும், விசுவாசத்தில் உறுதியில்லாதவர்களும் செல்ல முடியாது என்பதை அறியலாம். கர்த்தர் இறுதி நியாயத் தீர்ப்பின் போது வெள்ளாடுகளையும் செம்மறியாடுகளையும் பிரிப்பது போன்று நீதிமான்களையும், துன்மார்க்கரையும் தனித்தனியே பிரிக்கும் போது அது தெரிய வரும். (மத் 25:31-46)

பரிசுத்த வேதாகமத்தில் பரலோகத்தைப் பற்றி அநேக வசனங்கள் உண்டு. வெளிப்படுத்தின விசேஷம் என்னும் தரிசன நூலில் அப்போஸ்தலன் யோவானுக்கு பரலோகத்தின் சில காட்சிகளைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆயினும் அவைகள் தெளிவாக இன்னதுதான் என்று அவரால் உறுதியாகக் கூற முடியவில்லை. மனிதர்கள் அதை ஓரளவுக்குப் புரிந்து கொள்ளும் வண்ணம் அதைப்பற்றி உருவகமாகச் (symbolic) சிலவற்றை எழுதுகிறார். உதாரணமாக, பரலோகம் என்னும் அழகிய நகரத்தை வர்ணிக்கும் போது, அதன் தெருக்கள் பொன்மயமானவை என்றும், அதனுடைய சுவர்கள் விலையுயர்ந்த கற்களால் ஆனவை என்றும் கூறுகிறார். அல்லாமலும், 'பின்பு நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் கண்டேன். முந்தின வானமும், முந்திய பூமியும் ஒழிந்து போயின. சமுத்திரம் இல்லாமற் போயிற்று.

யோவானாகிய நான் புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்திலிருந்து பரலோகத்தை விட்டு இறங்கி வரக்கண்டேன். அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப் பட்டிருந்தது.

மேலும் பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ் சத்தத்தைக் கேட்டேன். அது; இதோ; மனுஷர்களிடத்தில் தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது. அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன் தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்.

அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை முந்தினவைகள் ஒழிந்து போயின, என்று விளம்பினது.

சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவர்: இதோ நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும் அவர் இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள் இவைகளை எழுது என்றார்.

அன்றியும் அவர் என்னை நோக்கி; ஆயிற்று, நான் அல்பாவும் ஓமேகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவ தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன். ஜெயங் கொள்ளுகிறவன், எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்வான். நான் அவன் தேவனாயிருப்பேன்; அவன் என் குமாரனாயிருப்பான்.

பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும் கொலைபாதகர்களும் விபச்சாரக்காரரும், சூனியக் காரரும், விக்கிரக ஆராதனைக் காரரும் பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார் வெளி 21:1-8.

பாவத்திலும், அக்கிரமத்திலும், தேவ பயமற்ற சூழ்நிலையில் பிரச்சனைகளும் தொல்லைகளும் நிறைந்த உலகத்தில் வாழ்கிற ஒவ்வொருவருமே இன்பமயமான அழகிய நகரமாகிய பரலோகத்துக்குச் செல்ல விரும்புவார்கள் என்பது உண்மை. ஏனெனில் இந்தப் பொல்லாத உலகத்தில் காணப்படும் பலவிதமான கேடுபாடுகள் அற்றதும், இன்பமும், சமாதானமும் நிறைந்து நித்தியமாய்வாழக் கூடிய இடமுமாகப் பரலோகம் இருக்கிறது என்று வேதம் வர்ணிக்கிறது அப்போஸ்தலன் பவுல் கூட பரலோகம் செல்ல விரும்பினர். ஆனால் இன்னும் அநேகரைக் கர்த்தருக்குள் வழி நடத்துவதற்கு இங்கே சிலகாலம் இருப்பது நலம் என உணர்ந்தார்.

'கிறிஸ்து எனக்கு ஜீவன்' சாவு எனக்கு ஆதாயம்

ஆகிலும் சரீரத்தில் பிழைக்கிறதினாலே என் கிரியைக்குப் பலன் உண்டாயிருப்பதால் நான் தெரிந்துகொள்ள வேண்டியது இன்னதென்று அறியேன்.

ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன் தேகத்தை விட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு; அது அதிக நன்மையாக இருக்கும்.

அப்படியிருந்தும்; நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம் என்கிறார் (தலி 1:21-24)

ஏறக்குறைய ஒவ்வொருவருமே பரலோகம் செல்ல விரும்புகிறேன் என்று வாயால் சொல்லுகிறார்கள். ஆனால் வெகு சிலரே அதற்குரிய விலையைக் கொடுக்க விரும்புகிறார்கள். பலருடைய வாழ்க்கையையும். அவருடைய திட்டங்களையும் பார்க்கும்போது அவர்கள் இந்த உலகத்திலேயே நிரந்தரமாகத் தங்கியிருப்பவர்கள் போன்று நடந்துகொள்ளுகிறார்கள். கடவுளைப் பற்றிய எண்ணமோ அவருடைய உபதேசச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்ற ஆவலோ, கர்த்தருக்கு உண்மையாக இருக்கவேண்டும் என்ற மனச்சாட்சியோ இருப்பதில்லை. அஞ்ஞானிகள் எப்படி வேலை, குடும்பம், கல்வி, வீடு, உணவு, தொலைக்காட்சி, வீடியோ இன்னும் பலவிதமான உலகப் பொருள்களின் மேல் ஆசைகள் வைத்திருக்கிறார்களோ அதே போலத்தான் விசுவாசிகளும் நடந்து கொள்ளுகிறார்கள், ஒரு வித்தியாசத்தையும் காணோம். வாழ்நாள் குறுகியது என்றும், மரணம் எந்த சமயமும் நேரிடலாம் என்ற சிந்தனை இருப்பதாகத் தெரியவில்லை.

உலகப் பொருள்களைப் பற்றி இயேசு இப்படியாக எச்சரிக்கிறார். பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம். இங்கே பூச்சியும், துருவும் அவைகளைக் கெடுக்கும். இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்.

பரலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள். அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை. அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுவதுமில்லை.

உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும்இருக்கும் மத் 6-19-21.

பரலோகம் செல்ல விரும்புபவர்கள் இவ்வசனங்கள் கூறுகிற உண்மைகளைச் சிந்திப்பார்களாக. அப்போஸ்தலன் பவுல் கூட வாழ்க்கையைப் பற்றி நம்முடைய சிந்தனைப் போக்கு எப்படி இருக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். 'உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை; இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதும் இல்லை என்பது நிச்சயம்.'

உண்ணவும், உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதும் என்று இருக்கக் கடவோம். ஐஸ்வரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும், கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும், அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்.

பண ஆசை எல்லா தீமைக்கும் வேராக இருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும், விசுவாசத்தையும், அன்பையும், பொறுமையையும், சாந்த குணத்தையும் அடையும்படி நாடு 1 தீமோ 6:8-11.

என் நண்பனே, நீர் பரலோகம் போக விரும்புகிறீரா? ஆம் என்பது உமது பதிலானால் அது சம்பந்தமாக தேவன் விதித்துள்ள நிபந்தனைகள் என்ன என்பதைச் சிந்திக்க முற்படு. நீர் வேத புத்தகத்தை எடுத்து, இரட்சிப்படைவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதைத் தேடி வாசித்து, அவைகளை விசுவாசித்துக் கீழ்ப்படிய வேண்டும், அப்படிச் செய்தால் அவருடைய ஆவிக்குரிய குடும்பமாகிய சபையில் உம்மைச் சேர்த்துக் கொண்டு, நித்திய ஜீவனைப்பற்றிய நம்பிக்கையைத் தருவார். அது முதல் நீர் அவருக்கு உண்மையுள்ள சாட்சியாக வாழ்ந்து வாரத்தின் முதல் நாள் தோறும் ஆராதித்து, தேவபக்திக்குரிய தூய வாழ்வு வாழ்ந்து நீர் செய்கிற, பேசுகிற அனைத்திலும் அவருக்கு முதலிடம் கொடுத்தால், நீர் மரிக்கும்போது பரலோகம் போவதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

ஐயோ! நான் இவ்வளவு காரியங்களைச் செய்ய முடியுமா! உலக ஆசாபாசங்களை, இன்பங்களைத் துறப்பது எப்படி? என்று திகைக்காதே. கர்த்தருடைய ஆலோசனையின்படி நடந்தால் இம்மையிலும் கூட தற்போது உள்ளதை விட சிறந்த வாழ்க்கை வாழ முடியும். முயற்சித்துப் பாரும். நிச்சயமாகவே இது உண்மை என்பது உமக்குப் புரியும்.

அடுத்து, உம்முடைய குடும்ப நிலை எப்படி? அவர்களும் உம்மோடு பரலோகம் வரவேண்டும் என்று விரும்புகிறீரா? அப்படியானால், நீர் ஒரு சிறந்த முன் மாதிரியாகத் திகழ்ந்து கிறிஸ்து உம்முடைய வாழ்க்கையில் செய்த எல்லாவற்றையும் அவர்களுக்கு எடுத்துரைத்து, முடிந்த அளவு அவர்களும் உம்மோடு பரலோகம் சேருவதற்கு உதவுங்கள். தேவ வசனங்களை அவர்களுக்குப் போதித்து அவர்களையும் ஆராதனைக்கு அழைத்துக் கொண்டு வரப் பிரயாசப்படுங்கள். உங்களுடைய குழந்தைகளுக்குக் கிறிஸ்தவ மாப்பிள்ளையும், பெண்ணும் கிடைக்கத் தக்கதாக இப்பொழுதிருந்தே திட்டமிட்டு உங்கள் உறவினர்களையும், நண்பர்களையும் கூடக் கிறிஸ்தவர்கள் ஆகும்படி கர்த்தருடைய வசனங்களை அவர்களுக்குக் கற்றுக்கொடுத்து வருங்கால சந்ததிகளை கிறிஸ்துவுக்குச் சொந்தமாக்குங்கள். இவைகளை யெல்லாம் செய்தால் உங்கள் குடும்பமும் இரட்சிக்கப்பட்டு பரலோகம் செல்ல முடியும் 'எழுதியிருக்கிறபடி, தேவன் தம்மேல் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவும் இல்லை; காது கேட்கவுமில்லை. அவைகள் மனிதருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை என்று பவுல் கூறுகிறார் (1 கொரி 2:9).

என் நண்பனே! நீர் பரலோகத்தை அடையக் கூடுமானால் இம்மையிலும் மறுமையிலும் உமக்கு எல்லாமே கிடைத்த மாதிரி தான். பரலோகத்தை அடைய முடியாவிட்டால் சகலத்தையும் இழந்த மாதிரி தான். கர்த்தர் உமக்காக பரலோகத்தில் ஒரு மாளிகையை உருவாக்கியிருக்கிறார் என்பதை மறவாதீர். நீர் அந்தப் பரலோகத்திலுள்ள வாசஸ்தலத்துக்கு வந்து நித்திய காலமாய் வாழ்ந்து களிக்க, கர்த்தர் உம்மை வருந்தி அழைக்கிறார். பரலோகம் ஆயத்தப்படுத்த மக்களுக்கென்று ஆயத்தப் படுத்தப்பட்ட இடம்; அதை அடைய வேண்டும் என்ற விருப்பத்தோடு முயற்சி செய்வதைவிட இங்கேயும், மறுமையிலேயும் வேறு முக்கிய அலுவல் என்ன இருக்கமுடியும்?

J. C. சோட்

## திருச்சபையின் செயல் நோக்கம்

உலகத்தில் உள்ள எல்லா நாட்டவருக்கும்:

1) நற்செய்தியைப் பிரசங்கிக்க வேண்டும்
2) சீடர்களாக வேண்டும்
3) திருமுழுக்குக் கொடுக்க வேண்டும்
4) போதிக்க வேண்டும்

# ஆவியினால் பிறப்பது என்றால் எப்படி?

இந்தக் கேள்வி நமக்கு மட்டுமல்ல; நியாய சாஸ்திரியாக இருந்த நிக்கொதேமுக்கும் கூடப் புரிந்து கொள்ளமுடியாமல் இருந்திருக்கிறது. இருப்பினும் பரிசுத்த ஆவியானவரின் துணை கொண்டு இதை விளக்குவதற்கு முயல்வோம்

இதை நாம் சரியாகப் புரிந்து கொள்வதற்கு உதவியாக சரீரப் பிரகாரமான பிறப்பு எப்படி நிகழ்கிறது என்று கவனிப்போம். ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பதற்கு ஒரு ஆணும் ஒரு பெண்ணும் தேவை. ஆணின் விந்து (வித்து) பெண்ணின் கருப்பைக்குள் செலுத்தப்படும் போது பெண் கருவுற்று ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு ஒரு குழந்தை பிறக்கிறது.

ஆவிக்குரிய பிறப்பு விஷயத்திலும் கூட இதே விதிதான். ஒருவன் ஆவிக்குரிய பிறப்பு அடைய வேண்டும் என்றால் அவனுடைய/ அவளுடைய உள்ளத்தில் ஆவிக்குரிய வித்து செலுத்தப்பட வேண்டும். அந்த ஆவிக்குரிய வித்து எது?

லூக் 8-ம் அதிகாரம் 11-ம் வசனத்தில் தேவனுடைய வசனம் விதைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. ஆவிக்குரிய பிறப்பைப் பற்றி பேதுரு கூறும்போது "அழிவுள்ள வித்தினாலே அல்ல; என்றென்றைக்கும் நிற்கிறதும், ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே" என்கிறார் 1 பேதுரு 1:23.

யாக்கோபு நிருபத்திலும் "அவர் சித்தம் கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மை சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்" என்று வாசிக்கிறோம். யாக் 1:18

மேற்கூறிய வசனங்களின் மூலம் பரிசுத்த ஆவியினால் அருளப்பட்ட தேவனுடைய வசனங்களே ஜீவனைக் கொடுக்கக்கூடிய ஆற்றல் உள்ள வித்தாக நம்முடைய உள்ளங்களில் ஊன்றப்படுகின்றன என்பது தெளிவாகிறது.

"விசுவாசம் கேள்வியினாலே வரும்: கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்று பவுல் கூறுவது எவ்வளவு உண்மை! (ரோமர் 10:17) விதை போடாமல் செடி முளைத்து வளராது என்பது யாவரும் அறிந்த உண்மை. ஆணின் வித்து பெண்ணின் கருப்பைக்குள் செலுத்தப்படும்போது பெண் கருவுறுகிறாள், ஆனால் குழந்தைப் பிறப்பு உடனே நடந்து விடுவதில்லை. அதற்கு முன்னதாகக் கருவுற்றதினால் ஏற்படும் விளைவுகளை நாம் காண்கிறோம். குழந்தை கருப்பைக்குள் வளர வளரத் தாய்மை அடைந்த பெண்ணின் சரீரத்தில் சில மாற்றங்கள் தென்படுகின்றன. இது இயற்கைச் சட்டம்.

அதே போன்று ஒருவன் தேவனுடைய வசனத்தைக் கேட்கும் போது அதை விசுவாசிக்கிறான்; அதைப் பற்றிச் சிந்திக்கிறான். அதன் காரணமாக அவனுடைய செயல்களில் மாற்றம் உண்டாக வேண்டும். தன்னிடத்தில் இருந்த தவறான பழக்க வழக்கங்கள், பாவச்செயல்கள் ஆகியவைகளுக்காக மனம் வருந்தி அவைகளை விட்டுவிடவேண்டும், நற் பழக்கங்களைக் கைக் கொண்டு, தேவனுக்குப் பிரியமான வாழ்க்கையில் தேறி வருகிறது யாவருக்கும் தெரியவேண்டும். அதைத் தான் மனந் திரும்புதல் என்கிறோம்.

"தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான்: ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது. அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ் செய்யமாட்டான்" என்று யோவான் எழுது கிறார். 1 யோவான் 3:9. இதற்கு, ஒரு விசுவாசி, பாவம் செய்யவே மாட்டான், பரிசுத்தமடைந்து விடுவான் என்று கொள்ளக்கூடாது, ஒரு உண்மையான விசுவாசி பாவம் செய்யும் இயல்பிலே இன்பம் காண மாட்டான். அவனையும் மீறி பாவம் செய்யக்கூடிய இயல்பு மேற்கொள்ளும்போது அவன் அதற்காகத் துக்கப்பட்டு, வெட்கப்பட்டு வேதனைப்படுவான் (ரோமர் 7:15-24; வாசித்துத் தியானிக்கவும்)

மேலும் யோவான் 5-ஆம் அதிகாரம் 4,5 வசனங்களில் "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும், நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்? என்று யோவான் கேட்கிறார், அதாவது இயேசுவை தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக் கொள்கிறவன், உலக ஆசைகளை வெறுத்து, ஜென்ம சுபாவ மனிதர்களைப்போல சிற்றின்பம், பாவம் ஆகியவைகளில் நாட்டம் செலுத்தாமல் தேவனுக்கடுத்த காரியங்களில் ஈடுபாடு கொண்டு வெற்றி பெறுவான் என்று பொருள்.

எப்படி கருவுற்ற நிலையே குழந்தையைப் பெற்றெடுத்தற்குச் சமம் ஆகாதோ அது போன்று மேலே சொல்லப்பட்ட விசுவாசம் மற்றும் மனம் திரும்புதல் மட்டுமே ஆவியின் பிறப்பு ஆகிவிடாது. இந்த இரண்டு காரியங்களும் தேவ வசனத்தினால் ஜெநிப்பிக்கப்பட்ட நிலையே ஆகும்.

இனி ஆவிக்குரிய பிறப்பு என்பது தண்ணீர் முழுக்கினால் ஏற்படு கிறது என்பதைக் கவனிப்போம். இயேசு ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கவேண்டும் என்று கூறினார். அதன் பொருள் விசுவாசித்து மனம் திரும்பிய ஒரு மனிதன், தண்ணீரில் மூழ்கி எழுந்திருக்கவேண்டும். அதாவது நாம் விசுவாசித்து மனம் திரும்பும் போது ஜெநிப்பிக்கப் படுகிறோம்;(கருத்தரிக்கிறோம்) திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளும்போது பிறக்கிறோம்

'விசுவாசமுள்ளவனுகி (கருத்தரித்து) ஞானஸ்நானம் பெற்றவன் (பிறப்பு எய்தியவன்) இரட்சிக்கப்படுவான் விசுவாசியாதவனே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" மாற்கு 16:16. ஞானஸ்நானம் பெருதவன் ஆக்கினைத் தீர்ப்படைவானென்று இயேசு சொல்லவில்லையே என்றுசிலர் வாதிடலாம். கருத்தரித்திடுதலே பிறப்பாகாது. அதே போன்று விசுவாசமும் மனந்திரும்புதலுமே ஆவிக்குரிய பிறப்பு ஆகிவிடாது.

நாம் எப்படி இரட்சிப்படைகிருேம் என்பதை விளக்க "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின்படியே மறுஜென்மமுழுக்கினுலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினுலும் நம்மை இரட்சித்தார்" என்று பவுல் கூறுகிருர். தீத்து 3:5. ஆக ஒருவன் மறுபடியும் பிறக்கவேண்டுமாஞல் மறுஜென்ம முழுக்கும் (ஞானஸ்நானமும்) பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலும் (மனம் திரும்புதலும்) தேவை என்கிறது. இங்கேயும் ஜலமும் ஆவியும் சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்: ஆகவே மறுபடியும் பிறப்பதற்கு வேதம் சொல்லுகிற ஞானஸ்நானம் இன்றியமையாதது.

கருவுருமல் பிள்ளைப்பேறு கிடையாது. அது போல ஒருவன் விசுவாசித்து மனந்திரும்பாமல் ஞானஸ்நானம் மட்டும் பெற்றுக் கொண்டு வேதம் சொல்லுகிற இரட்சிப்பை பெறமுடியாது. ஒரு மனிதனை வலுவான கயிற்றினுல் கட்டித் தூக்கிக் கொண்டு போய் தண்ணீரில் முழுக்கி எடுத்து விட்டால் அவன் இரட்சிப்புக்குத் தகுதியடைந்து விடுவாஞ? அதே போல விசுவாசிக்க இயலாத ஒரு குழந்தைக்குத் திரு முழுக்குக் கொடுத்துவிட்டு, 12 அல்லது 15 ஆண்டுகள் கழித்து திடப்படுத்துதல் என்ற ஒரு சடங்கின் மூலம் அவனுக்கு வேதம் கூறுகிற இரட்சிப்புக்குத் தகுதியுள்ளவஞக்க முடியுமா? விசுவாசமும் மனந்திருபுதலும் கருவுறுதல் என்றும் தண்ணீர் ஞானஸ்நானம் பிறப்பு என்றும், நாம் மேலே பார்த்தோம் அப்படியிருக்கும் போது இன்று பிறப்பு; 12,15 ஆண்டுகளுக்குப்பிறகு கருத்தரித்தல் என்பது இயற்கைக்குப் பொருந்துமா? ஆஞலும் அதைத்திருத்திக் கொள்வதற்கு நம்முடைய பாரம்பரியப் பெருமை இடம் தருவதில்லை. இதுதான் நாம் தேவனுடைய வசனத்துக்குக் கொடுக்கும் மரியாதையா? "சிறுமைப்பட்டு ஆவியில் நொருங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்" என்கிருரே தேவன் (ஏசாயா 66:2) சகோதரர்களே! சிந்தித்துப் பாருங்கள்.

அதே போல கருவுறுதலே (விசுவாசம், மனந்திரும்புதல்) புதிய பிறப்பு ஆகிவிடாது என்பதும் கூட உண்மை. ஜலமும் ஆவியும் ஒருங்கிணையும் போதே புதிய பிறப்பு உண்டாகிறது. "நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவை பற்றும் விசுவாசத்தினுல் அவருடைய புத்திரராயிருக்கிறீர்களே, ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுள்ளாக ஞானஸ்நானம்

பெற்றவர்கள் எத்தனை பேரோ அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே (கலா 3:26,27) என்கிறார் பவுல் குழந்தைப்பிறப்பை ஆங்கிலத்தில் Delivery என்று கூறுகிறார்கள். கொலோ 1:13 கூட அதே அர்த்தத்தைத்தான் தெரிவிக்கிறது. ''இருளின் அந்தகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி (delivered) தமது அன்பின் குமாரனுடைய இராஜ்ஜியத்துக்குட்படுத்தினார் என்று கூறுகிறது. அதாவது கருவிலிருந்து குழந்தை எப்படி உலகுக்கு வருகிறதோ அதே போன்று இருளின் அதிகாரத்தினின்று அன்பின் குமாரனுடைய இராஜ்ஜியத்திற்குள் கொண்டு வரப்படுகிறோம்.

விசுவாசித்து மனந்திரும்பி இருந்தாலும் (கருவுற்றிருந்தாலும்) ஒருவன் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளாவிடில் (delivery ஆகாவிட்டால்) கருவில் ஏதோ கோளாறு அல்லது குழந்தை கருவிலேயே இறந்து போயிற்று என்று தானே பொருள்!

ஆகவே ஒரு மனிதன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பதற்கு, தேவனுடைய வசனம், பாவங்களை மன்னிக்கிற கிருபையும் தேவை. அது தேவனுடைய இலவசமான ஈவு. வசனத்துக்குக் கீழ்ப்படிந்து, மனந்திரும்பி, திருமுழுக்குப் பெற்றுக் கொள்வது மனிதனுடைய கடமை. நாம் இந்தச் சிறிய விஷயத்தைக் கூடச் செய்ய மனமில்லாமல் அதையும் தேவனே செய்யவேண்டும் அல்லது அதிலும் சலுகை வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியல்ல. தேவனுடைய மகத்தான இரக்கத்தைப் பயன்படுத்தி இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வோமாக!

—E. Z. செல்வநாயகம்

## பரிசுத்த ஆவியின் வரங்கள்:

வல்லமையான ஜெபம், வரம்பெற்ற ஊழியர் என்பதெல்லாம் புராணப் பிதற்றல்களில் வரும் ரிஷி, முனிவர் என்ற வரிசையில் வருகிற மூடத்தனம் நிறைந்த புசப்பு வார்த்தைகள், இறைவன் தரும் வரம் முழுக்க முழுக்க நன்கொடை. அதைத் தங்கள் சொந்தப் புகழ்ச்சிக்கோ, செல்வாக்குக்கோ, நிதி திரட்டுவதற்கோ பயன்படுத்துவது தேவனுக்கு ஏற்புடையதல்ல.

அதை தேவனுடைய மகிமைக்காகவும், புகழுக்காகவும், மக்களின் பக்தி விருத்திக்காகவும் அறிவுத் தெளிவுக்காகவும் பயன்படுத்த வேண்டும். கொலோ 3:17

# புறஜாதி அப்போஸ்தலன்

அப்போஸ்தலர்களில் பேர் பெற்றவர் புறஜாதிகளின் அப்போஸ்தலரான பவுல். கலா 1:6; 2:9 அவர் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஆதி அப்போஸ்தலர்களில் ஒருவர் அன்று. இருப்பினும் பரிசுத்த ஆவியானவர் நம்முடைய விசுவாசத்தை ஊன்றக் கட்டுவதற்கு மற்றெல்லா அப்போஸ்தலர்கள் எழுதினவைகளைப் பாதுகாப்பதை விட இவருடைய எழுத்துக்களைக் கடனமாகப் பாதுகாத்திருக்கிறார். சபை வரலாற்றிலேயே இவர் ஓர் முக்கியமான சுவிசேஷப் பிரசங்கி என்பதற்கு அட்டியில்லை. அப்படிப்பட்டவருடைய வாழ்க்கையையும் அவருக்கும் தேவனுக்கும் ஏற்பட்ட தொடர்புகளையும் சற்றே ஆய்வு செய்வோம்.

**குணப்படாததற்கு முந்தின சவுல்:**

அப்போஸ்தலன் பவுல் என்றும் புறஜாதி அப்போஸ்தலன் என்று குறிப்பாகவும் அழைக்கப்படுகிறவர் தான் கர்த்தரால் இச்சிறப்பான சேவைக்குப் பிடிக்கப்படும் வரையிலும் சவுல என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்தார். கிறிஸ்தவத்தின் விரோதியாயிருந்த சவுல் எப்படிப்பட்டவராக இருந்தார் என்று அப்போஸ்தலனாகிய பவுலே யூதர்களுடைய ஜனகாீம் சங்கத்துக்கு முன்பாகஒளிவு மறைவின்றி சாட்சி பகர்கிறார். "நான் யூதன், சிலிசியா நாட்டில் உள்ள தர்சு பட்டணத்திலே பிறந்து, இந்த நகரத்திலே கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்து, முன்னோர்களுடைய வேதப்பிரமாணத்தின் படியே திட்டமாகப் போதிக்கப்பட்டு இன்றையதினம் நீங்கள் எல்லோரும் தேவனைக்குறித்து வைராக்கியமுள்ளவர்களாயிருப்பது போல நானும் வைராக்கியமுள்ளவனாயிருந்தேன்.

நான் இந்த மார்க்கத்தாராகிய புருஷரையும் ஸ்திரீகளையும் கட்டி, சிறைச்சாலைகளில் ஒப்புவித்து, மரணபரியந்தம் துன்பப்படுத்தினேன். அதற்குப் பிரதான ஆசாரியரும் மூப்பர் யாவரும் சாட்சி கொடுப்பார்கள்; அவர்கள் கையிலே நான் சகோதரருக்கு நிருபங்களை வாங்கிக் கொண்டு, தமஸ்குவிலிருக்கிறவர்களும் தண்டிக்கப்படும்படி அவர்களைக் கட்டி, எருசலேமுக்குக் கொண்டு வரும்படி அவ்விடத்திற்குப் போனேன். )அப் 22:3-5( கிறிஸ்துவின் சபையைத் துன்புறுத்தி அதன் எதிரியாக இப்படிப்பட்ட கொடூரமான காரியங்களைச் செய்திருந்தபடியால் தன்னை பாவிகளில் பிரதான பாவி என்று அழைத்துக்கொள்ளுகிறார் (1 தீமோ 1:15)

சவுல் இப்படிப்பட்ட நிலையில் இருந்ததற்கு அறியாமையும், அவிசுவாசமுமே காரணம் என்கிறார் 1 தீமோ 1:13. "விசுவாசம் கேள்வியினாலே வருகிறது. கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வருகிறது (ரோமர் 10:17) என்று வேதம் சொல்லுகிறதைப் போல தேவனுடைய வசனத்தை அறியாதிருந்தால் அவிசுவாசம் போவதற்கு வாய்ப்பேது? ஆனால் அறியாமை என்று சொல்லி தண்டனைக்குத் தப்ப முடியாது.

நாம் முதன்முதலில் சவுலை, ஸ்தேவான் என்னும் பரிசுத்தவான் கல்லெறிந்து கொல்லப்படும் காட்சியில் சந்திக்கிறோம். (அப் 7:58-59) "சவுல் வீடுகள் தோறும் நுழைந்து புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டு போய், காவலில் போடுவித்து சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான்" (அப் 8:3) என்று விவரிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, அந்நாட்களில் எருசலேமில் சபையைப் பாழாக்கும் இயக்கத்துக்கு இவன் தான் நிர்வாக இயக்குனராக இருந்திருக்க வேண்டும். என்றும், ஸ்தேவானின் மரணத்திற்கும் இவனே காரணமாக இருந்திருந்திருப்பான் என்றும் தோன்றுகிறது. எருசலேம் போன்ற ஓரே ஒரு பட்டணத்தில் இவ்வழிவு வேலையைச் செய்வது தன்னுடைய அந்தஸ்துக்குச் சின்னவிஷயம் என்று எண்ணி தமஸ்கு பட்டணத்துக்கும் சென்று அங்கே கிறிஸ்தவத்தைத் தழுவிக் கொண்ட யூதர்களையும் இழுத்து வந்து அவர்களுடைய மத விரோதச் செய்கைகளுக்குத் தக்க தண்டனை தர பிரதான ஆசாரியர்களிடத்திலே நிருபங்களை பெற்றுக் கொண்டு தமஸ்வுக்கும் பயணமானான். அப் 9:1-2. இவ்வளவு வெறி பிடித்த ஒரு ஆளை, கிறிஸ்துவுக்கு உண்மையுள்ள தொண்டனாகவும், சாந்தமும் பொறுமையுமுள்ள மனிதனாகவும் மாற்றக் கூடுமா என்று எவருக்கும் சந்தேகம் எழுவது இயற்கையே.

**சவுல் இயேசுவைக் கண்டார், கேட்டார்:**

இப்படிப்பட்ட வெறி உணர்வோடு தமஸ்குவுக்குப் பயணமாய்ப் போன சவுலுக்கு ஏற்பட்ட அனுபவம் தர்சு பட்டணத்துச் சவுலின் கொலைகார வாழ்க்கையை மட்டுமல்ல, பெயரையும் மாற்றி கிறிஸ்துவின் நற்செய்தியைச் சுமந்து செல்லும் கழுதையாக பவுல் அப்போஸ்தலனை மாற்றிற்று. இதுவே சபையைத் துன்புறுத்தும் சவுலின் இறுதிப் பயணமானது. அதற்குப் பிறகு அவர் நான்கு சிறந்த பயணங்களை மேற்கொண்டார், ஆனால் அவைகள் சபையை அழிப்பதற்கல்ல, சபைகளைக் கட்டுவதற்கும், நிர்மாணிப்பதற்கும். கர்த்தரால் ஆகாத காரியம் ஒன்றுண்டோ?

'அவன் பிரயாணமாய்ப் போய், தமஸ்குவுக்குச் சமீபித்தபோது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது. அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான்.

அதற்கு அவன், ஆண்டவரே, நீர் யார். அதற்குக் கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்' என்கிறார். (அப் 9:3-5)

கர்த்தராகிய இயேசு சவுலுக்கு நேர்முக தரிசனம் அளித்ததைப் பற்றியும் அதன் காரணத்தைப் பற்றியும் பலவிதமான தவறான கருத்துகள் நிலவுகிறதைப் பார்க்கிறோம். சவுலை இரட்சிப்பதற்காக கர்த்தர் சவுலுக்கு தரிசனமானாரா? தமஸ்கு பட்டணத்துக்குப் போகும் வழியிலே சவுல் இரட்சிக்கப்பட்டாரா? ஆம் என்பது அநேகருடைய பதிலாக இருக்கும் என்று ஊகிக்கிறேன்.

கர்த்தர் தரிசனம் கொடுத்த அந்த நாளிலே சவுல் இரட்சிக்கப்பட்டிருந்தால், மற்றெவருக்கும் செய்யாத ஒன்றை இயேசு சவுலுக்குச் செய்திருக்கிறார். என்று ஆகிறது. அப்படியானால் தேவகுமாரன் பட்சபாதகமுள்ளவர் என்ற குற்றத்துக்கு ஆளாகிறார். வேதம் அப்படிச் சொல்லவில்லையே! சரி, கர்த்தர் சவுலை இரட்சிப்பதற்காக அவருக்கு தரிசனம் தரவில்லையென்று சொல்வோமானால் பின் தரிசனம் கொடுத்ததின் நோக்கம் என்ன? சவுலே அதற்கான விளக்கத்தைச் சொல்லுகிறார். கேளுங்கள். ''அப்பொழுது தான் ஆண்டவரே, நீர் யார் என்றேன். அதற்கு அவர் நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே இப்பொழுது நீ எழுந்து, காலூன்றி நில். நீ கண்டவைகளையும் நான் உனக்குத் தரிசனமாகி காண்பிக்கப் போகிறவைகளையும் குறித்து உன்னை ஊழியக்காரனாகவும், சாட்சியாகவும், ஏற்படுத்தியதற்காக உனக்கு தரிசனமானேன்.

உன் சுய ஜனத்தாரிடத்தினின்றும் அந்நிய ஜனத்தாரிடத்தினின்றும் உன்னை விடுதலையாக்கி, அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவ மன்னிப்பையும், பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக் கொள்ளும்படியாக அவர்கள் இருளை விட்டு ஒளியினிடத்திற்கும் சாத்தானுடைய அதிகாரத்தை விட்டுத் தேவனித்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும் பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார். (அப் 26:15-18)

அப்போஸ்தலருக்குள்ள பணிகளில் ஒன்று, மரித்து உயிர்த்தெழுந்த இயேசுவைக் குறித்துச் சாட்சி சொல்வது ஆகும். தமஸ்குவுக்குப் போகும் வழியில் சவுலுக்கு ஏற்பட்ட அனுபவம் உயிர்த்தெழுந்த இயேசுவைக் குறித்து சாட்சி சொல்லும் தகுதியைப் பெறுவதற்காக என்று எண்ணத் தோன்றுகிறது அதைத் தவிர வேறு எந்த வழியில் அந்தக் கனமான பட்டத்துக்கு அவர் உரிமை கொண்டாட முடியும்? 1 கொரி 9:1-ல், 'நான் அப்போஸ்தலன் அல்லவா? நான் சுயாதீனன் அல்லவா? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நான் தரிசிக்கவில்லையா?' என்றும், மீண்டும் 1 கொரி 15:3-5,8-ல் 'நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால் கிறிஸ்து வானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு வேத வாக்கியங்களின்படி மூன்றும் நாளில் உயிர்த்தெழுந்து கேபாவுக்குப் பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார் ...எல்லாருக்கும் பின்பு, அகாலப் பிரவி போன்ற எனக்கும் தரிசனமானார்' என்று கூறுகிறார்.

இவைகளிலிருந்து இயேசு தமஸ்குவுக்குப் போய்க் கொண்டிருந்த சவுலுக்குத் தரிசனமானது அவரை இரட்சிப்பதற்காக அல்ல. என்பது தெளிவு. சவுலும் கூட இரட்சிக்கப்பட்ட மனுஷனைப் போல செயல்படவில்லை. கர்த்தர் தரிசனமானபோது அவனைச் சுற்றிப் பிரகாசித்த ஒளி வெள்ளத்தால் பார்வையிழந்தவனாக கைலாகு கொடுப்

பவர்களால் தமஸ்கு பட்டணத்துக்கு வழி நடத்தப்பட்டான். (அப் 9:8) அதுமட்டுமல்ல, அவன் மூன்று நாள் பார்வையில்லாதவனாகப் புசியாமலும் குடியாமலும் இருந்தான்" என்று வசனம் கூறுகிறது (அப் 9:9) இரட்சிக்கப்பட்ட ஒருவன், தான் பாவத்திலிருந்து விடுதலையானதைக் குறித்து மகிழ்ந்து களிகூராமல் மூன்று நாள் உபவாசித்து, ஜெபம் செய்து கொண்டிருப்பானா? சவுலுக்கும் தான் இரட்சிக்கப்படவில்லை என்பது தெரியும். ஆகவே அவன் அதற்கேற்றபடி தான் நடந்து கொண்டான். இந்த மாதிரி ஒரு அனுபவத்தின் மூலமாகத் தானும் கர்த்தரை தரிசித்து அவருடைய வார்த்தைகளை நேரடியாக கேட்டுத் தான் இரட்சிக்கப்பட்டதை நிரூபிக்க வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபடுகிறவர்கள் வீணாகவே அப்படிச் செய்து கொண்டிருக்கிறார்கள். சவுலே கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட கடைசி அப்போஸ்தலன். ஆகவே அவரே கர்த்தரை இறுதியாக தரிசித்தவரும் நேரடியாகப் பேசினவரும் ஆவார். கர்த்தரை நிச்சயமாக நாம் எல்லோரும் பார்ப்போம்; அவருடைய சத்தத்தைக் கேட்போம். அது இப்பொழுதல்ல; நியாயத் தீர்ப்பின் நாளில்.

ஆகவே சகோதரர்களே, வேத வசனங்களின் மெய்ப் பொருளை அறிந்து கொள்ள மனத் தாழ்மையோடு கர்த்தருடைய வசனங்களை ஜெபத்துடன் வாசித்து சிந்தியுங்கள். தேவனுடைய திட்டம் காலத்துக்குக் காலம் வித்தியாசப்படுகிறது. கருத்தாய்த் தேடி வாசித்து பயன் அடையுங்கள்.

பாக்ஸ்டர் கிரேவ்ஸ்

## ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு திரியும் ஓநாய்கள் யார்?

வேதாகம உண்மைகளை அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பயன்படுத்த முடியாத / விரும்பாத பாமர மக்களை தங்கள் விளம்பரத்துக்கும் இழிவான ஆதாயத்துக்கும், பயன்படுத்தி பெரும் லாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கிற மக்கள்,

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்து, நய வசனப் பின்னும், இச்சகப் பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள். ரோமர் 16:18

# கலப்பட கிறிஸ்தவம்

கலப்பட உணவைப் பற்றி நாம் அறிவோம். சுத்தமற்ற சம்பந்தமில்லாத மலிவான ஒரு பொருளை கலக்கும் போது உணவு கலப்படமாகி விடுகிறது. உதாரணமாக பாலில் தண்ணீர், மிளகாய்ப் பொடியில் செங்கல் தூள், மிளகில் பப்பாளி விதை, காபித்தூளில் கரித்தூள் இத்தியாதி. இவை சுத்தமற்ற அல்லது கலப்படப் பொருள் எனக் கூறப்படுகிறது. இலாபத்திற்காக இவ்விதமான கலப்படம் நடக்கிறது. இவ்வித உணவுப் பண்டங்களை வாங்கிப் புசிப்பவர் இவை சுத்தமானவை என எண்ணி ஏமாந்து போகின்றனர். பின் விளைவாக உடல் நலக்குறைவு ஏற்படுவதும், சமயத்தில் மரணத்தில் முடிவதும் கண்கூடாகக் காணும் காட்சி.

நம்மிடையே கலப்பட உணவு எவ்வளவு சர்வ சதாரணமாகக் காணப்படுகிறதோ, அதேபோல கிறிஸ்தவமும் இன்று கலப்படமாகக் காட்சி அளிக்கிறது. கிறிஸ்தவம் என பொய்த்தோற்றமளித்து கலப்பட கிறிஸ்தவம் நம்மை குழப்புகின்றது. ஆனால் அது உண்மைக் கிறிஸ்தவமாக இருப்பதில்லை.

கிறிஸ்தவம் எவ்வாறு கலப்படமாகிறது? வேதாகமம் கூறுபவற்றில் மனிதனுடைய போதனைகளை, எண்ணங்களை, மனித பெயர்களை கலக்கும் போது அது கலப்பட கிறிஸ்தவமாகிறது. இவ்வித போதனைகளை உண்மையென ஏற்றுக் கொள்ளுபவர்கள் ஏமாற்றத்திற்குள்ளாகி விளைவை அனுபவிக்க நேரிடுகிறது.

நீங்கள் எதை விரும்புகிறீர்கள்? சுத்தமான உணவையா, கலப்பட உணவையா? உங்களுக்கு இதன் விடை தெரியும், கலப்படமற்ற உணவையே விரும்புவீர்கள். கிறிஸ்தவத்திற்கு நாம் வரும் போது நீங்கள் எதைத் தேர்ந்தெடுப்பீர்கள்? உண்மைக் கிறிஸ்தவத்தையா, கலப்படம் செய்யப்பட்டதையா? நீங்கள் சரியாக சிந்திக்கும் திறன் பெற்றவராயிருப்பின் உண்மைக் கிறிஸ்தவத்தைத்தானே விரும்ப முடியும்?

கலப்படமற்ற உணவைப் பெற நீங்கள் எங்கு செல்ல வேண்டும்? சுத்தமான உணவு கிடைக்கும் இடத்திற்குத் தானே; பசுவிடம் சென்றால் தான் சுத்தமான பால் கிடைக்கும்; அதாவது ஒரு பொருளின் ஊற்றுக்கண் எங்கோ அங்கு சென்றால் உண்மையான, சுத்தமான கலப்படமற்ற பொருள் கிடைக்கும், என்பதை நீங்கள் அறிவீர்கள். தகராறு எங்கே தோன்றுகிறது? பிறர் மூலமாக உங்கள் உணவுப் பொருள் உங்களை அடையும் போது தான கலப்படம் ஏற்படுகிறது. அவர்கள், உணவில் சில பொருட்களைச் சேர்க்கவோ, அல்லது நல்லதை எடுத்து விடவோ அல்லது மாற்றவோ செய்வதால்தான் கலப்படப்

பொருள் உங்களை வந்து அடைகிறது. எனவே பரிசுத்தமான உணவுப் பொருள் கிடைக்க அதன் தோற்றுவாய் எங்கோ அங்கு செல்ல வேண்டும். ஏமாற்றத்தைத் தவிர்க்க அதுவே சரியான வழியாகும்.

கிறிஸ்தவத்தை எடுத்துக் கொண்டாலும் மேற்சொன்ன உதாரணம் பொருந்தும். கலப்படமற்ற உண்மைக் கிறிஸ்தவத்தை நீங்கள் நாடினால், அதன் தோற்றுவாய்க்கு நீங்கள் செல்ல வேண்டும். அதாவது, வேதாகமத்திற்கு! அங்கு மட்டுமே நீங்கள் உண்மைக் கிறிஸ்தவத்தைக் காண முடியும். மனிதர்களின் கை வழியாக கிறிஸ்தவம் வரும் போது சிலதை சேர்ப்பதோ, எடுத்து விடுவதோ, மாற்றுவதோ நடப்பதால் உண்மைக்கு மாறுபட்ட ஒன்றைத்தான் காண முடிகிறது. இவ்வாறு மாறுபட்ட, கலப்பட கிறிஸ்தவத்தையே உண்மை என பலர் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். கலப்படம் என்பதையே இவர்கள் அறிவதில்லை. வேதாகமத்திற்குள் சென்றால் உண்மைக் கிறிஸ்தவத்தைக் காண முடியும் என்பதை இவர்கள் அறிவதில்லை,

கலப்பட உணவும், உணவு என்றே அழைக்கப்படுகிறது. ஆனால் அது சுத்தமானதல்ல, பலர் அதை பரிசுத்தமானதென்றே எண்ணுகின்றனர். உண்மைக்கும் கலப்படத்திற்கும் உள்ள வேறுபாட்டை இனங்காணும் திறன் படைத்தவர்கள் மட்டுமே அதை புரிந்து கொள்ள முடியும், இதே போலவே, வேதாகமப் போதனைகளைக் கொண்டு உண்மைக் கிறிஸ்தவத்தை அறியும் திறன் படைத்தவர் மட்டுமே போலிக்கும் உண்மைக்கும் உள்ள வேறுபாட்டை அறிவர்.

அருமை நண்பரே, ஏமாந்து போகாதிர் உங்கள் வேதாகமத்தைப் படியுங்கள். அப்பொழுதே அது சொல்லுவதைத் தெரிந்து கொள்வீர். சத்தியத்தை நீங்கள் அறியும் போது உண்மைக் கிறிஸ்தவத்திற்கும், கலப்படத்திற்கும் உள்ள வித்தியாசத்தை தெளிவாக புரிந்து கொள்வீர்கள்.

தேவனை மகிமைப்படுத்த, அவர் நமக்களித்த உண்மைக் கிறிஸ்தவத்தை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். பரிசுத்த மனதோடு (மத்தேயு 5;8) தேவனுக்கும் நமது சகோதரர்களுக்கும் முன்பாக உலகத்தால் கறைபடாதபடி நம்மைக் காத்துக் கொள்கிறதே பிதாவாகிய 'தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது'. (யாக்கோபு 1:27) பரிசுத்தமற்றதும், கலப்படம் செய்யப்பட்டதும் தேவனுடையதல்ல. எனவே, தேவனால் இவ்வுலகிலும் மறு உலகிலும் அது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

# பிரிவுகள் தோன்றும் முன் சபையின் நிலை என்ன?

ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்... (1 பேதுரு 4:11) என்பதும், ''கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்க வேண்டும்'' (2 யோவான் 9) என்பதும் அதி முக்கியத்துவம் பெற்றவை என தேவனுடைய வசனங்கள் நமக்குத் தெளிவாகத் தெரிவிக்கின்றன.

கொஞ்சமும் கூடக் குறைய இன்றி, கிறிஸ்துவின் கட்டளைகளின்படி மட்டுமே இன்று மக்கள் நடப்பதாக இருப்பின், அவர்கள் ஏதோ ஒரு சபைப் பிரிவில் அங்கம் வகிக்க மாட்டார்கள். எல்லா பிரிவு சபைகளும் மனிதனால் இயற்றப்பட்ட சட்ட திட்டங்களின் விளைவாகத் தோன்றிய காரணத்தால், இவ்விதப் பிரிவின் ஏதாவது ஒன்றில் சேர்ந்திருப்பதால், ஒருவன் கிறிஸ்துவின் கட்டளைகளுக்கு கூடுதலாகவோ இன்றி குறைவாகவோ உள்ள ஒரு அமைப்பில் அங்கம் வகிக்கிறான் என்பது தெளிவு. நமது ''விசுவாசம் மனித ஞானத்திற்குரிய நய வசனத்தைச் சாராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும்'' (1 கொரி 2:5) என அப்போஸ்தலன் பவுல் கூறுகிறார்.

வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்திலுமிருந்து வந்து எருசலேமில் திரளாகக் கூடியிருந்த தேவ பக்தியுள்ள யூத மக்களுக்கு கிறிஸ்துவைப் பற்றிப் பேதுரு போதித்தாக, அப்போஸ்தலர் நடபடி இரண்டாவது அதிகாரத்தில் நமக்குச் சொல்லப் பட்டுள்ளது. அவரது போதனைகளால் இருதயங்களிலே குத்தப்பட்டவர்களாகி பேதுருவையும் பிற அப்போஸ்தலர்களையும் நோக்கி ''சகோதரரே; நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' (அப்போஸ் 2:37) எனக் கேட்க, ''நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்'' (வசனம் 38) என பேதுரு கூறினார்.

''அவனுடைய வார்த்தையை சந்தோசமாக ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்'' (வசனம் 41) ''இரட்சிக்கப்பட்டவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்'' (வசனம் 47) ''இரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பெலனாயிருக்கும்'' (ரோமர் 1:16) கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு மட்டும் கீழ்ப்படிந்த, அசைக்க முடியாத விசுவாசமுள்ள மக்கள் கிறிஸ்துவின் சபையில் மட்டுமே அங்கம் வகித்தனர், வேறெந்த பிரிவு சபையிலும் அவர்கள் உறுப்பினரல்ல, அதே போன்ற விசுவாசம் (கூடவோ குறையவோ இன்றி) உடைய மக்களை கிறிஸ்துவின் சபையில் இணைக்கிறது. வேறெந்த பிரிவிலும் அவர்களை இணைப்பதில்லை.

விசுவாசத்திலும், நடைமுறையிலும் தேவனுடைய சட்டங்களை மட்டும் (தேவனுடைய வார்த்தை) எவ்விதமாற்றமும் இன்றி கடைபிடித்து, மதச்சட்டங்களை உருவாக்கும் தலைவன் என எந்த மனிதனையும் ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில், புதிய ஏற்பாட்டு சபை உறுப்பினர்கள், அன்று எவற்றையெல்லாம்கடைபிடித்தனரோ அவற்றை மட்டுமே பின்பற்றும் உறுப்பினர்ராக இருக்கும்பட்சத்தில், புதிய ஏற்பாட்டு சபையின் நிர்வாகத்தை முழுமையாக உண்மையுடன் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில், அவ்வித மக்களின் கூட்டம் இயேசு கிறிஸ்து நிறுவிய சபையில் மட்டுமே அங்கம் வகிப்பர். அதுவே புதிய ஏற்பாட்டு (கலப்படமற்ற) சபையாகும். 'சபையாகிய "சரீரத்தில் பிரிவினை இல்லாதிருக்க வேண்டும்" (1 கொரி 12:25) என உணர்ந்த அப்போஸ்தலர் பவுல், கொரிந்து சபைக்குக் கீழ்க் கண்டவாறு அறிவுரை வழங்குகிறார்.

"சகோதரரே, நீங்களெல்லோரும் ஒரே காரியத்தைப் பேசவும் பிரிவினைகளில்லாமல் ஏக மனதும் ஏக யோசனையும் உள்ளவர்களாய் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். (1 கொரி 1:10)

எனவே, பிரிவினைகள் தோன்றுவதற்கு முன்னர் புதிய ஏற்பாட்டு சபை, அதாவது கிறிஸ்துவின் சபை மட்டுமே இருந்தது என்பதும் அதில் அங்கம் வகித்தவர்கள் கிறிஸ்தவர்கள் என மட்டுமே அழைக்கப்பட்டனர் என்பதும் பரிசுத்த வேதாகமம் நமக்கு தெள்ளத் தெளிவாகக் காட்டும் உண்மைகளாகும்.

மூலம்: G. F. ரெயின்ஸ் தமிழில்: எஸ். எஸ். ராஜன்

## காக்காய் பிடிக்காதே; கர்த்தர் விரும்புகிறதைச் செய்

நீங்கள் என் சந்நிதியில் வரும்போது, என் பிரகாரங்களை இப்படி மிதிக்க வேண்டுமென்று உங்களிடத்தில் கேட்டது யார்?

இனி வீண் காணிக்கைகளைக் கொண்டு வரவேண்டாம். தூபங்காட்டுதல் எனக்கு அருவருப்பாயிருக்கிறது; நீங்கள் அக்கிரமத்தோடே ஆசரிக்கிற மாதப் பிறப்பையும், ஓய்வு நாளையும் சபைக் கூட்டத்தையும் நான் இனி சகிக்கமாட்டேன்.

உங்கள் மாதப் பிறப்புகளையும், உங்கள் பண்டிகைகளையும் என் ஆத்துமா வெறுக்கிறது. அவைகள் எனக்கு வருத்தமாயிருக்கிறது; அவைகளைச் சுமந்து இளைத்துப் போனேன்.

நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும், என் கண்களை உங்களை விட்டு மறைக்கிறேன். நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன்; உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது.

உங்களைக் கழுவி சுத்திகரியுங்கள். உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு, தீமை செய்தலை விட்டு ஓயுங்கள்.

நன்மை செய்யப் படியுங்கள்; நியாயத்தைத் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து, திக்கற்றப் பிள்ளைகளின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும் விசாரியுங்கள்.

# பரிசுத்த வேதாகமம்

வேதாகமம் என்ற சொல்லின் அருத்தம் திருமறை நூல் என்பது. தேவன் தம்மைத் தாமே மனிதனுக்கு இந்த ஒரு நூலில்தான் வெளிப்படுத்தியிருக்கிறார், தேவன் நம்முடைய கடமைகளைச் சொல்லுகிறதும் இந்த ஒரு புத்தகத்தில்தான். அப்படியானால், நாம் வேதாகமத்தைப் புறக்கணித்து விட்டால், தேவனைப் பற்றி அறிவதற்கோ அல்லது அவருடைய சித்தம் நமக்கு என்ன என்பதை அறிவதற்கோ வேறு வழி ஒன்றும் இல்லை.

நம்முடைய பொது அறிவு, உலகம் தன்னைத்தானே உருவாக்கிக் கொண்டு இருக்கக்கூடும் அல்லது அது தற்செயலாக அவ்வாறு தோன்றி இருக்கக்கூடும் என்று நம்புவதற்கு மறுக்கின்றது. எனவே, இயற்கையின் வேலைப்பாடுகள் நமக்கு, இயல்பாக ஒரு தேவன், ஒரு சிருஷ்டிகர் இருக்கிறார் என்று தெரிவிக்கின்றன. தொன்றுதொட்டுப் பகுத்தறிவுள்ள மனிதர்கள் அனைவரும் வேதாகமத்தைக் கொண்டோ அல்லது வேதாகமம் இல்லாமலோ சிருஷ்டிகர் ஒருவர் இருக்கிறார் என்று நம்பி வந்தார்கள்;

ஆனால், இயற்கை நமக்குச் சிருஷ்டிகர் ஒருவர் இருக்கிறார் என்று மட்டும் தெரிவிக்கிறது. அது அவரைப் பற்றியோ அல்லது நாம் என்ன செய்யவேண்டும் என்று அவர் விரும்புகிறார் என்பதைப் பற்றியோ நமக்கு ஒன்றும் சொல்லுகிறது இல்லை. வேதாகமம் மட்டுமே நமக்கு இந்தச் செய்தியைத் தெரிவிக்கிறது. நாம் தேவன் இருக்கிறார் என்பதை இயற்கையின் மூலம் அறிகிறோம் என்று சொல்லலாம்; ஆனால் வேதாகமம் அவர் என்னவாயிருக்கிறார், யாராயிருக்கிறார் என்பனவற்றையும் நமக்கு வெளிப்படுத்துகிறது.

இந்த உலகத்தில், சிருஷ்டிகர் ஒருவர் இருக்கிறார் என்று நம்புகிற மக்கள் சிலர் உண்டு; ஆனால், அவர்கள் அவர் ஒரு போதும் தம்மையோ அல்லது தம்முடைய சித்தத்தையோ வெளிப்படுத்தினது இல்லை என்று மறுக்கிறார்கள். இவர்கள், "இயற்கைச் சமயவாதிகள்" (Deist) என்று அழைக்கப்படுவார்கள். இவர்களுடைய கொள்கை நியாயமானதா? தேவன் ஒருவர் இருக்கிறார் என்றால், அவர் அவருடைய சிருஷ்டிப்பை, சிறப்பாக அவருடைய சிருஷ்டிப்பின் மணிமுடியான மனிதனை அவர் நேசிக்க வேண்டும் என்று எதிர்பார்த்தல் மிகவும் இயல்பானதும் நியாயமுள்ளதுமான காரியமல்லவா? தேவன் மனிதனை அவ்வளவு பொறுமையோடும் அக்கறையோடும் சிருஷ்டித்த பின்னர் அவர் அவனுக்கு வழிகாட்டுதலோ அல்லது அறிவுரையோ அருளாமல் பொறுப்பற்றவனாய், கடமை உணர்வற்றவனாய் இருக்கும்படி விட்டு விட்டார் என்பது நடக்கக் கூடியதா? அக்கறையுள்ள ஒரு சிருஷ்டிகர் தம்முடைய

படைப்பின் இறுதிப் பலனில் கவலையுற்று இருக்கக் கூடுமா? ஒரு மனிதன் கூட அவவாறு பொறுப்பற்று நடந்துகொள்ள மாட்டானே! நாம் மிகுந்த ஆர்வத்துடனும் அக்கறையுடனும் கடுமையாக உழைத்து ஒரு பொருளைச் செய்து முடிக்கும் போது அதனை அலட்சியமாக அப்பாலே தூக்கி எறியமாட்டோம், எனவே சிருஷ்டிகர் ஒருவர் இருக்கின்றமையால் நாம் எல்லா வாதப் பொருத்தத்துடனும் அவர் தம்மையும், மனிதருக்குத் தம்முடைய வழியையும் தாமே வெளிப்படுத்தி உள்ளார் என்பதை நம்பவேண்டியவர்களாக இருக்கிறோம்,

வேதாகமம் ஆரம்ப முதல் இறுதி வரை, தேவனுடைய வெளிப்படுத்துதலாக அதிகார உரிமையுடன் பேசுகிறது. அது அவ்வாறு ஞானிகளும் சான்றோர்களுமான மனிதர்களால் நூற்றாண்டுகளினூடே ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது; அதனுடைய நற்செயல்கள் எண்ணிக்கைக்கு அடங்காதனவாகும். வேதாகமம் உரிமை பேசுகிற அதிகார பூர்வமான நிலை மிகுந்த வெளிப்படுத்தலினால், மனிதனுக்குத் தேவனுடைய திருவார்த்தையினால் மெய்ப்பிக்கப்பட்டு இருக்கிறது அவருடைய சிருஷ்டிப்பாகிய நம்மீது உள்ள அவருடைய அன்பின் நிமித்தம், அது நமக்கு அருளப்பட்டு இருக்கிறது. நாம் வாழவேண்டிய வழியை அவர் நமக்கு வெளிப்படுத்துகிறார், ஏனென்றால் இதனை நாம் நம்முடைய சொந்த ஞானத்தினால் அறிந்துகொள்ள முடியாது. ''கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்." (எரேமியா 10:23). ''என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசாயா 55:8). ''உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும் என்பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது'' (சங்கீதம் 119:105). ''வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது: தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும், இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது''

(II தீமோத்தேயு 3:16, 17).

## வேதாகமத்தின் பிரிவுகள்

ஆனால் இந்த வெளிப்படுத்தல் தேவனிடம் இருந்து படிப்படியாக அருளப்பட்டு இருக்கிறது. மனிதன் சகலத்தையும் ஒரே தரம் பெற்றுக் கொள்ள இயலாதவனாக இருந்தான். இப்படியாக நமக்கு வேதாகமத்தில் வெவ்வேறு நிலைகளில் அல்லது படிகளில் உள்ள வெளிப்படுத்தல் இருக்கின்றது. நாம் இந்த எடுத்துக்காட்டை உய்த்துணரலாம்: ஒரு காலத்தில் இந்த இந்தியக் கூட்டரசு பிரிட்டனுடைய சட்டத்தால் ஆளப்பட்டு வந்தது; அப்பொழுது அது நாட்டின் சட்டமாக இருந்தது. ஆனால் சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு, புதிய அரசியலமைப்பு கொண்டு வரப்பட்டது. இது பிரிட்டனுடைய சட்டத்தை அப்புறப்படுத்திவிட்டது

நாடு வளர்ந்து விருத்தி அடைவதற்கு ஏற்றவாறு, வளரும் தேவைகளை நிறைவேற்றுகிறதற்காக நாம் சட்டங்களைப் பிறப்பிக்கவேண்டும். எல்லாக் காலங்களிலும், நாம் நம்முடைய காலத்தில் அமுலிலிருக்கும் சட்டங்களுக்கே பதில் சொல்லும் பொறுப்பு உள்ளவர்களாக இருக்கிறோம், புதிய அரசியல் அமைப்பின் வருகையினால் பிரிட்டனுடைய சட்டம் அதிகாரமற்ற தாக்கப்பட்டமையினால் நாம் பிரிட்டனுடைய சட்டத்திற்குக் கடமைப் பட்டவர்கள் அல்ல,

பரிசுத்த வேதாகமம் இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டு உள்ளது: ஒன்று பழைய ஏற்பாடு; இது கிறிஸ்துவின் மரணம் வரைக்கும் அமுலிலிருந்தது; அடுத்தது புதிய ஏற்பாடு; இது கிறிஸ்துவின் மூலம் தேவனுடைய வெளிப்படுத்தலும் கிறிஸ்துவின் காலத்திலிருந்து வாழும் எல்லாருக்கும் தேவனுடைய பிரதான சட்டமுமாகும், இந்த இரண்டு ஏற்பாடுகளுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை நாம் புரிந்து கொள்ளுதல் மிகவும் அத்தியாவசியமானது. நாம் எந்தச் சட்டத்தின் கீழ் வாழ்கிறோமோ அதனால் நியாயந்தீர்க்கப் படுகிறோம்; நமக்கு இப்பொழுது அந்தச் சட்டம் புதிய ஏற்பாடு. இது அமுலுக்குக் கொண்டு வரப்படுவதற்கு முன்னால் இருந்த சட்டமான பழைய ஏற்பாட்டின்படி நாம் நியாயந்தீர்க்கப் படுகிறது இல்லை. யோவான் 12:48.

வேதாகமம் அறுபத்தாறு ஆகமங்களாலானது. அவற்றுள் முப்பத்தொன்பது பழைய ஏற்பாட்டிலும், இருபத்தேழு புதிய ஏற்பாட்டிலும் உள்ளன. இந்த ஆகமங்கள் பல நூற்றாண்டுகளாகப் பல்வேறு பரிசுத்தவான்களால் எழுதப்பட்டன. இருப்பினும் இவை அனைத்திற்கும் தேவனே ஆக்கியோனாகையால் அது நம்முன் எவ்வித முரண்பாடோ அல்லது பொருந்தாத் தன்மையோ இல்லாமல் நிலைத்து இருக்கிறது.

## வேதாகமத்தை எவ்வாறு கற்பது?

வேதாகமம் ஒரு குறிப்பிட்டப் பொருளைப் பற்றி என்ன போதிக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பதற்கு நாம் என்ன செய்வது? எடுத்துக்காட்டாக, கிருபை என்பதைப் பற்றி வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள விரும்பினால், எவ்வாறு கண்டுபிடிப்பது? முதலாவது, ஒரு நல்ல வேதாகம ஒத்துவாக்கிய அகராதியை எடுத்துக் கொண்டு, "கிருபை" என்ற தலைப்பின் கீழ்ப் பாருங்கள். அந்தச் சொல் காணப்படுகிற எல்லா வேதப்பகுதிகளும் அங்கே வரிசைக் கிரமமாய்க் கொடுக்கப் பட்டிருக்கும். வேதாகமம் ஒரு பொருளைப் பற்றி ஒரு தரம் மட்டும் சொன்னால் அது போதுமானது; அது திரும்பவும் சொல்லப்பட வேண்டிய அவசியம் இல்லை; ஏனென்றால், வேதாகமத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் தேவன் பேசு-

கிறார். இருந்த போதிலும், அநேக வேதப் பகுதிகள் கொடுக்கப் பட்டிருக்குமானால், அவை எல்லாவற்றையும், படியுங்கள்; ஒவ்வொன்றையும் மற்றொன்றின் வெளிச்சத்தால் கற்கவேண்டும்.

எடுத்துக்காட்டாக, கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றி நீங்கள் முழுவதும் அறிய விரும்பினால், மத்தேயுவில் அதனுடைய ஒரு பகுதியும் லூக்காவில் அதனுடைய இன்னொரு பகுதியும் இருக்கக் காண்பீர்கள். இவற்றுள் எந்த ஒன்றும் உங்களுக்கு முழுச்செய்தியையும் கொடுக்காது; மத்தேயு, இயேசு பெத்லகேமில் பிறந்தார் என்று சொல்லுகிறார்; ஆனால் லூக்கா, அந்த நேரத்தில் மரியாளும் யோசேப்பும் பெத்லகேமில் எப்படி இருக்கும்படி நேர்ந்தது என்பதை விளக்குகிறார். மத்தேயு கிழக்கிலிருந்து வந்த புத்திமான்களையும் சத்திரத்தின் மேல் வந்து நின்ற நட்சத்திரத்தையும் பற்றிச்சொல்லுகிறார். ஆனால் லூக்கா, மேய்ப்பர்களைப் பற்றியும் அந்த மகத்துவமான பிறப்பை அவர்களுக்கு அறிவித்த தேவ தூதர்களைப் பற்றியும் சொல்லுகிறார், ஒருபோதும், ஒரே ஒரு வேதப் பகுதியை மட்டும் படித்து விட்டு இதுதான் அந்தப் போதனையின் முடிவு என்று சொல்லிவிட வேண்டாம்; அதே பொருளைப் பற்றியவனவாக இருக்கிற மற்ற வேத வாக்கியங்களையும் பாருங்கள்; எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துஆழ்ந்து ஆராய்ந்து பாருங்கள் முழுவேதாகமத்தையும் நுணுகி ஆராய்ந்து கற்க வேண்டும்.

மேலும், எப்பொழுதும் நீங்கள் குறிப்பாகப் படிக்கிற வசனத்திற்கு முன்னுலிருக்கிற வசனங்களையும் பின்னுலிருக்கிற வசனங்களையும் உங்களுக்குச் சூழ்நிலைப் பொருத்தம் கிடைக்கிறதற்காக வாசியுங்கள். ஓர் எழுத்தாளன் ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் சொல்லுகிற சூழ்நிலைப் பொருத்தத்தை அறிந்து கொள்ளுவதினால் நாம் பலமுறை தவருக அர்த்தம் கொள்வதிலிருந்து காப்பாற்றப்படுவோம்.

நீங்கள் ஆழ்ந்து கற்கின்றபொழுது கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்டுக் கொள்ளுங்கள். யார் பேசுகிறது? அவர் யாருடன் பேசுகிறார்? ஏன் அவர் பேசுகிறார்? எந்த ஏற்பாடு அல்லது சட்டத்தின் கீழ்ப் பேசுகிறார்? எல்லாவற்றிற்கும் மேலாக, வேதாகமத்தைத் தொடர்ந்தும் திட்டமிட்ட படியும் படியுங்கள்.

### வேதாகமத்தைக் கற்பதின் முக்கியம்:

மனிதனுடைய மனத்தின் விருப்பத்தின் மிக மேலான குறிக்கோள் தேவனைப் பற்றிய அறிவைப் பெறுவது. நாம், அவரைப் பற்றிய அறிவடையும் போது, நாம் என்ன செய்ய வேண்டும் என்று அவர் விரும்புகிறார். என்பதையும் அறிகிறோம். மேலும் நாம் அவரை மகிழ்விக்க தக்கதாக எப்படி வாழவேண்டும் என்பதையும் அறிகிறோம். அவரை உண்மையாக அறிகிறதற்கு அவருடைய திருமறையின் ஏடுகளை அல்லாமல் வேறுவழி ஒன்றும் இல்லை. அது எல்லாரும் அணுகத்தக்க பொதுமை உடையதாய் இருக்கிறது; அவரவர்கள் தெரிந்து கொள்வதன்படியே அறிவாற்றலைப் பெறலாம். தேவனைப் பற்றிய அறிவு இல்லாமல் மனிதர்க்கு இரட்சிப்பு இல்லை; வேதாகமம் இல்லாமல் தேவனைப் பற்றிய அறிவு இல்லை; ஆகவே பரிசுத்த வேதாகமத்தைக் கற்பதற்கு முயலுங்கள்.

—ஞானசிகாமணி

# நரகத்தின் உண்மை இயல்பு

வாழ்க்கையின் சில உண்மைகள் கடுமையானவைகளாக இருக்கின்றன. மனித இனத்தின் வளர்ச்சியில் பாவம் ஓர் அவசியமான துணைப்பாகம் அல்ல. ஆனால் ஓர் அநாகரிகமான உண்மை நிலை, 'எல்லோரும் பாவம் செய்தார்கள்' (ரோ. 6:23) என்பது, இன்னொரு உண்மை: 'அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்படைவதும் 'மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது' (எபி 9:27). மரணம் கொடூரமான ஒன்று; எனவே, நாம் அதைப்பற்றிய எண்ணத்தையே தவிர்ப்பதற்கு மிகுந்த ஆவலுடன் சோதிக்கப்படுகிறோம். ஆனாலும் அது அடிக்கடித் தானாகவே நம்முடைய கவனத்தை ஈர்க்கிறது; சிலவேளைகளில் திடீரென்று, எதிர்பாராதவாறும் ஆக்கிரமிப்போடும் தோன்றுகிறது. நம்மில் சிலரே நம்முடைய நெருங்கிய உறவினர்களும் நண்பர்களும் மரணக்குழியைக் கடப்பதற்கு முன்னர்வரை நீடித்து வாழ்கிறோம்.

நரகத்தின் உண்மை இயல்புங்கூட ஒரு கடுமையான உண்மை. ஆனால் நாம் தேவனுடைய முழு ஆலோசனையையும் அறிவிக்க வேண்டியவர்களாக இருக்கிறபடியினால், நாம் மரணத்தைப் பற்றிய சிந்தனையையே புறக்கணிக்க முடியாதது போல பாவம் நரகம் என்பவைகளின் உண்மைகளையும் நாம் புறக்கணிக்கக்கூடாது.

வேதவாக்கியங்களின் நரகத்தைப் பற்றிய உயர்ந்த உருவகமான மொழி பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. நம்முடைய தற்கால அறிவும் அனுபவமும் அப்படிப்பட்ட ஓர் இடத்தின் சூழலை எஞ்சக்கூடியதாக இல்லாமையால் இத்தகைய மொழி பயன்படுத்தவேண்டிய அவசியம் உண்டாயிற்று. எல்லா மொழிக்கும் அருத்தம் உண்டு. உருவக மொழி மிகுந்த பொருளுடன் உணர்ச்சி விளக்கமாக்கக் கூடியது. அது தனிச் சிறப்பு வாய்ந்த அருத்தத்தை வெளியிடக் கூடியது. நேர்முக அறிவிப்புப் பயனற்றதாகப் போனாலும் அது உணர்ச்சிகளின் மீது மிகவும் பலமாய் வேலை செய்கிறது. உண்மையான நித்திய நரக அக்கினியை உடைய அல்லது தீயினால் ஏற்படும் எரிப்பை விட மிகுந்த வேதனையைக் கொடுக்கும் ஓர் இடம் உண்டு.

இயேசு நரகத்தின் உண்மை இயல்பைப் போதித்தார். இயேசு தம்முடைய சீஷர்களுக்கு அருளிச் செய்த மலைப்பிரசங்கம் பொதுவாக அவிசுவாசிகளாலும் கிறிஸ்துவினுடைய போதனையின் சுருக்கக் குறிப்பு என்று மிக உயர்வாகப் புகழப்படுகிறது. இந்தப் பிரசங்கத்தில் தான் இயேசு சரி நுட்பமாக '....தன் சகோதரனை மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்' (மத். 5:22) என்று உறுதிப்படுத்துகிறார். மேலும் அதனுடைய வேதனை மிகவும் கொடிய

தாக இருக்கிறது.? உன் வலதுகண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப் போவது உனக்கு நல்லாயிருக்கும்" (மத். 5;29,30-ஆம் வசனத்தைப் பாருங்கள்.)

இயேசு மற்றும் ஓர் இடத்தில் நரகத்தோடு மரணத்தை ஒப்பிட்டுப் பேசும்போது, மரணம் ஓர் அனுபவம் என்றும், அவ்வகையில் அது எவ்வித பயத்தையோ அல்லது பயமுறுத்தலையோ உடையதாக இல்லை என்றும் போதிக்கிறார். 'ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்' (மத். 10:29) நித்திய நரக அக்கினிக்கு என்று இருக்கும் ஒரு வளமுள்ள சரீரத்தைக் காட்டிலும் உருக்குலைந்தும், சப்பாணியும் முடமுமான ஓர் ஊனமுள்ள சரீரமே மேலானது என்று தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது, மத் 18:8, 9 ஐப்பாருங்கள். "ஜீவனும்," "தேவனுடைய ராஜ்யமும்" நேர்மாறான பயங்கர மாறுபாட்டுடன், "நித்திய அக்கினிக்கும்," "நரக அக்னிக்கும்," எதிராக வைக்கப்பட்டு உள்ளது, "அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்" (மத். 18: 8,9: மாற். 9:47, 48).

முடிவில்லாத தண்டனையை உடைய இந்த இடம், "புறம்பான இருள்"(மத். 8:12), "அக்கினிச் சூளை," "அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்" (மத். 13:41, 42; 22:13): "பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற......நித்திய அக்கினி" (மத். 25: 41, 46); "..இந்த அக்கினி ஜுவாலையில் வேதனைப்படுகிறேனே..." (லூக்கா 16:22—24, 28) என்றெல்லாம் விளக்கியுரைக்கப்பட்டு உள்ளது.

பவுல், தேவன் இருக்கிறார் என்கிற காரியமே நித்திய ஆக்கினையைப் பற்றிய போதனையை வற்புறுத்துகிறது என்று உறுதிபடுத்துகிறார். தேவன், "உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு... பிரதிபலனைக்" கொடுப்பார். இதனோடும் ஆண்டவராகிய இயேசுவின் வருகையோடு "ஜுவாலித்து எரிகிற அக்கினி," "ஆக்கினைச் செலுத்துதல்," "தண்டனை, "நித்திய அழிவு" முதலியன உடன்சேர்ந்து வரும் (I தெசலோனிக்கேயர் 1: 6-10 வசனங்களைப் பாருங்கள்).

நித்திய துன்பத்தை உடைய இதனை யூதா, "என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிற" (யூதா 12,13) ஓர் இடம் என்று விவரிக்கின்றார்.

அப்போஸ்தலனாகிய யோவான் எழுதிய புத்தகங்களில் அன்பு மூலச் சொல்லாகக் காணப்படுகிறது. கர்த்தருடைய பயங்கரத்தின் வெளிப்படுத்துதல் மட்டுமே அவருக்கு அருளப்படாமல், இழந்து போன

வர்கள்மீது அவருக்கு இருந்த அன்பானது, இறுதிவெளிப்படுத்தலில் தன்னிச்சையான போக்குள்ளவர்களும், முரட்டாட்ட முள்ளவர்களும், எதிர்த்து நிற்கிறவருமான பாவிகளை எச்சரிக்கும்படியும் வற்புறுத்திற்று. அப்படிப்பட்ட ஒருவன், "தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக்குடித்து,...அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான்; அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்.... எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது" (வெளி. 14:9-11); "கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோட தள்ளப்பட்டார்கள்" (வெளி. 19:20; மேலும் வெளி. 20:14, 15 யும் பாருங்கள்); "அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்" (வெளி. 20:10 மேலும் வெளி. 21:18-ஐயும் பாருங்கள்.)

நாம் நித்திய பேரின்பத்தினின்றும் ஆனந்தத்தினின்றும் மட்டும் நீக்கப்படுகிறவர்களாக இருக்கமாட்டோம். லூக்கா 16:25 இல் ஆபிரகாம் அந்தச் செல்வந்தனுக்குச் சொன்ன வார்த்தை, 'மகனே ....நினைத்துக்கொள்'' என்பது நம்முடைய மரணத்தில் நினைவு நம்மை விட்டு நீங்கிப் போவதும் இல்லை. "..தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய்..." (ரோமர் 3:25) விளங்கும் தேவன் தம்முடைய முன்னிலையில் அவருடைய நீதியை விளங்கச் செய்யும்போது மனசாட்சியானது மெல்லிய அமைதியுடையதாக இருக்கும். நகரத்தின் எல்லைக்குள்ளே அடையாளம் கண்டு கொள்ளப்படுகிற தோடல்லாமல் பரலோகத்திற்கும் நரகத்திற்கும் நடுவே கடந்து போகக் கூடாதபடிக்குப் பிரிக்கிறதுமான பெரும் பிளப்பைத் தாண்டியும் அடையாளம் கண்டு கொள்ளப்படும்.

மரணத்தின் போது அடிப்படையான ஒழுக்கமும் தனித் தன்மையும் நித்திய காலமாக நிலைநாட்டப் பெறும். "அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்" (வெளி. 22:11). இந்த வாழ்க்கையில், மிகவும் இழிவான பாவியும் தான் என்றேனும் ஒரு நாளைக்கு திருந்திவிடுவேன் என்று தன்னைச் சாந்தப்படுத்திக் கொள்கிறான். புதைகுழிக்குப் பிறகு மனமாற்றமடைவதற்கு ஓர் எள்ளளவு வாய்ப்பும் இல்லை. இத்தகைய வாய்ப்பு நரகத்தில் ஒரு போதும் உண்டாவதும் இல்லை. தன் விருப்பத்தை வெளிப்படுத்த முடியாத முழுத்தடையுடன் இதனையும் சேர்த்து இரட்டிப்பாக்குக! பொய்யன் பொய் சொல்ல முடியாது. திருடனால் எதனைத் திருட முடியும்? விபசாரம் கேள்விக்கே அப்பாற்பட்டதாக இருக்கும்.

நரகத்தின் எரி தழலுடன் இதுவும் சேர்ந்து எரிபொருளை அதிகரித்து அனல் மூட்டுவதுபோல் இருக்கும்.

(இதன் தொடர்ச்சி அட்டையின் 2-ஆம் பக்கம் பார்க்க)

YOUR ATTENTION PLEASE:

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The Voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 3815, New Delhi-110049.
Mondays-9 : 00to 9 : 15 P. M.
Fridays-7 : 45 to 8 : 00 P. M.

**HINDI**—Satya Susamachar-Speaker : Sunny David.
All correspondence should be sent to Satya-Susamachar, Post Box 3815, New Delhi-110049.
Tuesdays-9 : 00 to 9 : 15 P. M.
Thursdays-9 : 00to 9 : 15 P. M.
Fridays-9 : 00 to 9 : 15 P. M.
Sundays-12 : 45 to 1 : 00 P. M.

**TELUGU**—The Voice of Truth-Speaker : Joshua Gootam
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 80, Kakinada-533001.
Sundays-2 : 30 to 2 : 45 P. M.
Tuesdays-2 : 30 to 2 ; 45 P. M.
Thursdays–2 : 30 to 2 : 45 P. M
Fridays-2 : 30 to 2 : 45 P. M
Saturdays-2 : 30 to 2 : 45 P. M.

**TAMIL**—The Way of Truth-Speaker : P. R. Swamy.
All correspondence should be sent to The Way of Truth, Post Box 8405, Bangalore-560084.
Tuesdays-5 : 30 to 5 : 45 P. M.
Thursdays-6 : 45 to 7 : 00 P M.
Sundays-6 : 45 to 7 : 00 P. M.

**MALAYALAM**—The Voice of Truth-Speaker : P. K. Varghese
All corespondence should be sent to Church of Christ Thevally, Quilon 9 (Kerala.)
Tuesdays 3 : 45 to 4 : 00 P. M.
Fridays-3 : 45 to 4 : 00 P. M.

ALL ARE ENCOURAGED TO LISTEN

**Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed. Also the radio sermons are available in book form.**

## கோடை ஸ்பெஷல்.

பரிசுத்த ஆவியானவரைப் பற்றி அறிந்து கொள்ள விருப்பமா?
வாருங்கள், கேட்டுப் பயன் பெறுங்கள்!

✳ முற்றிலும் இலவசம் ✳ வயது வரம்பு கிடையாது.

✳ சமய வேறுபாடு தடையில்லை. அனைவரும் கலந்து கொள்ளலாம்

இடம்: 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638002.
கிறிஸ்துவின் சபை கூடும் இடம்.

காலம்: 1989 ஏப்ரல் 20 வியாழன் முதல் மே 20 ஞாயிறு வரை

நாட்கள்: ஞாயிறு, வியாழன் நேரம்: மாலை, 7 மணி – 8 மணி,

போதிப்புவர்: சகோ. E. Z. செல்வநாயகம்
ஆசிரியர். திருமறை ஆசான், ஈரோடு.

பொருள்: பரிசுத்த ஆவியானவர்.

நடத்துனர்: கிறிஸ்துவின் சபையார் ஈரோடு-638002

பி-கு பத்து வகுப்புக்களுக்காவது தவறாமல் கலந்து கொள்பவர்களுக்கு நேர்த்தியான சான்றிதழும், பரிசுகளும் உண்டு.

Published by Church of chirst and Printedby Sri. vela E V. Rajamanickam at vela Printers, Erode-638 001. Phone: 74878
Editor. E. Z. Selvanayagam.

If undelivered please return to;
The Editor
THIRUMARAI AASAAN.
2, Manal Medu Street,
ERODE-638 002.

PRINTED MATTER BOOK-POST

TO
Mr. J. C. Choate
P.O. Box 3815
NEW DELHI
110049